

கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆணைக்கிணங்க கழக இளைஞரணி செயலாளர் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அறிவுறுத்தலின்படி மதுரை தெற்கு மாவட்ட செயல்வீரர்கள் கூட்டம் மாவட்ட செயலாளர் சேடப்பட்டி மு.மணிமாறன் தலைமையில் நடைபெற்றதில், மதுரை வடக்கு மாவட்ட செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி சிறப்புரையாற்றினார். உடன் ஆ.வெங்கடேசன் எம்.எல்.ஏ, தொகுதி பொறுப்பாளர்கள் சிவகாசி த.வனராஜா, டிஸ்கோ எம்.அலாவுதீன், ப.செல்லத்துரை, கழக நிர்வாகிகள் நாகராஜ், வக்கீல் ஆர்.பாலாஜி, சிவனாண்டி, கொம்பாடி தங்கம், ஏர்போர்ட் பாண்டியன், லதா அதியமான், செல்லம்பட்டி முத்துராமன், கே.இளமகிழன், ம.முத்துராமலிங்கம், கொடி சந்திரசேகர், ஆர்.பாண்டியன், ஞானசேகரன், தங்கப்பாண்டியன், விமல், சேதுராமன், சிவமுருகன், பி.எஸ்.என்.எல். செல்வம், ஆதிமூலம், கொ.தனபாண்டியன், ராமமூர்த்தி, மதன்குமார், சுதாகரன், ஸ்ரீதர், எஸ்.ஓ.ஆர் தங்கபாண்டியன், சரவணகுமார் மற்றும் திரளான கழக நிர்வாகிகள் கழகத்தினர் உள்ளனர்.




முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நாகர்கோவில் மாநகராட்சி சார்பில் மார்பக புற்றுநோய் விழிப்புணர்வு முகாம் மற்றும் கலந்துரையாடல் நிகழ்ச்சி மாவட்டச் செயலாளர் மேயர் ரெ.மகேஷ் தலைமையில் நடைபெற்றது. முகாமில் நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினரும் தி.மு.க. மாநில மருத்துவ அணி தலைவருமான மருத்துவர். கனிமொழி என்.வி.என். சோமு, ஆயிரம்விளக்கு சட்டமன்ற தொகுதி உறுப்பினரும், தி.மு.க. மாநில மருத்துவர் அணி செயலாளருமான மருத்துவர். எழிலன் நாகநாதன் ஆகியோர் கலந்து கொண்டு புற்றுநோய் விழிப்புணர்வு தொடர்பான கருத்துரையாற்றினர். மேலும் மருத்துவர்கள் சிவராம் கணேசமணி, பி.சுதாகர் ஆகியோர் புற்றுநோய் தொடர்பாக படக்காட்சிகள்களுடன் விளக்க உரையாற்றினார்கள்.

### நெல்லை மாவட்டத்தில் நடைபெறும்

# பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகள் குறித்து - துறை சார்ந்த அலுவலர்களுடன் ஆய்வு!

### அமைச்சர் கே.என்.நேரு மேற்கொண்டார்!

நெல்லை.அக்.21.

நெல்லை மாவட்டத்தில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சி திட்டப் பணிகள் குறித்து நகராட்சி நிர்வாக துறை அமைச்சர் கே.என்.நேரு வண்ணார்பேட்டை அரசு விருந்தினர் மாளிகையில் துறை சார்ந்த அலுவலர்களுடன் மாவட்ட ஆட்சியர் மரு. கா.ப.கார்த்திகேயன், நெல்லை நாடாளுமன்ற உறுப்பினர் செ.ராபர்ட் புரூஸ்,பாளை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல் வகாப், மாநகராட்சி மேயர் கோ.ராம கிருஷ்ணன், மாநகராட்சி ஆணையாளர் சுகபுத்ரா, மாநகர காவல் ஆணையாளர் ரூபேஸ் குமார் மீனா, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சிலம்பரசன், துணை மேயர் ராஜூ ஆகியோருடன் கலந்து ஆலோசனை மேற்கொண்டார்.

இந்தக் கூட்டத்தில் நெல்லை மாவட்டத்தில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சி திட்ட பணிகள் விரைந்து முடித்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரவும் மேலும் வடகிழக்கு பருவமழை தொடர்பாக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்தும் துறை சார்ந்த அலுவலர்களுடன் ஆய்வு செய்யப் பட்டது.

மாவட்டத்தில் நடைபெற்று வரும் அம்ரூத் குடிநீர் திட்டப் பணிகளை விரைந்து முடித்து பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும்.மேலும் மாநகராட்சி பகுதிகளில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள வார்த்தக மையக் கட்டிடம் வர்த்தக பயன்பாட்டிற்கு குறைந்த வாடகையில் வழங்குவதற்கும் மாநகராட்சியில் நடைபெற்று வரும் திட்ட பணிகளை விரைந்து முடிக்கவும், பொதுமக்கள் தேவையான புதிய திட்டப் பணிகளை உருவாக்கி அத்திட்டங்களையும் விரைந்து செயல்படுத்திடவும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

வடகிழக்கு பருவமழை காலத்தில் போதுமான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொண்டு எந்தவொரு பாதிப்பும் ஏற்படாத வண்ணம் அனைத்து துறை அலுவலர்களும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டது.

நிகழ்வில் மாநகர காவல் துணை ஆணையர் அனிதா, வருவாய் கோட்டாட்சியர் கண்ணா கருப்பையா நகராட்சி நிர்வாக மண்டல இயக்குனர் விஜயலட்சுமி,உதவி இயக்குனர் பேரூராட்சிகள் வில்லியம் ஜேசுதாஸ், குடிநீர் வடிகால் வாரிய செயற்பொறியாளர் ராமலட்சுமி மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### சிவகங்கை மாவட்டத்தில் 2026 தேர்தலில்

# 4 சட்டமன்றத் தொகுதிகளிலும் வெற்றி பெறுவோம்!

### மாவட்டக் கூட்டத்தில் தீர்மானம்: அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் அறிவிப்பு!

சிவகங்கை. அக். 21.

சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் மாவட்ட கழக செயற்குழு கூட்டம் காரைக்குடியில் தனியார் திருமண மண்டபத்தில் மாவட்ட அவைத்தலைவர் வழக்கறிஞர் அ.கணேசன் தலைமையில் முன்னாள் அமைச்சர் மு. தென்னவன் முன்னிலையில் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் மாவட்ட துணை செயலாளர் த.சேங்கை மாறன் வரவேற்றுப் பேசினார் .

இந்த கூட்டத்தில் திருமதி தமிழரசிரவிக் குமார் எம்.எல்.ஏ. சட்டமன்ற தொகுதி பார்வையாளர்கள் டாக்டர் என். சுந்தர்ராஜன், திருப்பத்தூர், கே.முருகவேல், காரைக்குடி, சண்முகம் சிவகங்கை, பி.கே.என்.போஸ் மானாமதுரை ஆகியோர் கலந்து கொண்டு வருகிற 2026சட்டமன்ற தேர்தலில் பணியாற்ற வேண்டியது குறித்து விளக்கி பேசினார்கள்.

கூட்டத்தில் கலந்து கொண்டு கூட்டுறவுத் துறை அமைச்சரும் மாவட்ட கழகச் செயலாளருமான கே ஆர். பெரிய கருப்பன் பேசியதாவது. வருகிற 2026ல் சட்டமன்றத் தேர்தல் நடைபெற உள்ளது .அதில் கழக தலைவர் முதல்வர் தளபதி அவர்கள் 200 தொகுதிகளை கைப்பற்ற வேண்டும் என்று திட்டமிட்டு அதற்கான வியூகத்தை அமைத்து செயல்பட்டு வருகிறார் . நாம் கடந்த பாராளுமன்ற தேர்தலில் 40 தொகுதிகளில் 200க்கும் மேற்பட்ட சட்டமன்றத் தொகுதிகளில் 200க்கும் மேற்பட்ட இடங்களில் வெற்றி பெற்றுள்ளோம். ஆனால் முதல்வர் அவர்கள் 200 தொகுதியில் மட்டும் வெற்றி பெற்றால் போதும் என்று அறிவித்துள்ளார்.

இதில் சிவகங்கை மாவட்டத்தில் நான்கு சட்டமன்ற தொகுதிகள் உள்ளது. நான்கு சட்டமன்ற தொகுதிகளுக்கு பார்வையாளர்களை கழகத்தலைவர் அவர்கள் நியமித்துள்ளார். அவர்களுக்கு அனைத்து நிர்வாகிகளும் ஒத்துழைப்பு தர வேண்டும். வெற்றி ஒன்றே நமது இலக்காக அமைத்து செயல்பட வேண்டும். நான்கு தொகுதிகளிலும் கூட்டணி கட்சி வேட்பாளர்கள் யார் நின்றாலும் அதைப்பற்றி நாம் கவலைப் படாமல் வெற்றி ஒன்றே இலக்காக கருதி அனைவரும் ஒற்றுமையுடன் தேர்தல் பணியாற்ற வேண்டும்.

இந்த வெற்றியை கழக தலைவர் தளபதி அவர்களின் காலடியில் சமர்ப்பிக்க வேண்டும். இவ்வாறு அமைச்சர் கே ஆர். பெரிய கருப்பன் பேசினார். காரைக்குடி மாநகர செயலாளர் துணைமேயர் என். குணசேகரன் நன்றி கூறினார்.

இந்த கூட்டத்தில் முன்னாள் எம்.எல்.ஏ. சுப.மதியரசன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நாகனிசெந்தில்குமார், செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள் உள்ளாட்சி பிரதிநிதிகள், சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

### முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு

# நாகர்கோவில் மாநகராட்சி சார்பில் மார்பகப் புற்றுநோய் விழிப்புணர்வு முகாம்!

### ரெ.மகேஷ் தலைமை! கனிமொழி சோமு எம்.பி - எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ. கருத்துரை!

கன்னியாகுமரி, அக். 21-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நாகர்கோவில் மாநகராட்சி சார்பில் மார்பக புற்றுநோய் விழிப்பு ணர்வு முகாம் மற்றும் கலந்துரையாடல் நிகழ்ச்சி (19.10.2024 சனிக்கிழமை) மாலை 4.00 மணிக்கு நாகர்கோவில் மாநகராட்சி அலுவலக வளாகத்தில் வைத்து கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ் தலைமையில் நடைபெற்றது.

இந்த விழிப்புணர்வு முகாமில் சிறப்பு விருந்தினர்களாக நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினரும் தி.மு.க. மாநில மருத்துவ அணி தலைவருமான மருத்துவ கனிமொழி சோமு, ஆயிரம் விளக்கு சட்டமன்ற தொகுதி உறுப்பினரும், தி.மு.க. மாநில மருத்துவ அணி செயலாளருமான மருத்துவர் எழிலன் நாகநாதன் ஆகியோர் கலந்து கொண்டு புற்றுநோய் விழிப்புணர்வு தொடர்பான கருத்துரையாற்றினார்கள்.

மேலும் மருத்துவர்கள் சிவராம் கணேசமணி, பி.சுதாகர் ஆகியோர் புற்றுநோய் தொடர்பாக படக்காட்சிகள்களுடன் விளக்க உரையாற்றினார்கள். முகாமில் மாநகராட்சி தூய்மை பணியாளர்களுக்கு புற்றுநோய் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

நிகழ்ச்சியில் மாநகராட்சி ஆணையர் நிஷாந்த கிருஷ்ணா, மாநகர நல அலுவலர் மருத்துவர்.பார்த்திபன், மண்டல தலைவர்கள் ஜவஹர், அகஸ்டினா கோகிலவாணி, செல்வகுமார், மாமன்ற உறுப்பினர்கள், சுகாதார பணியாளர்கள், மாநில மகளிர் அணி செயலாளர் ஹெலன் டேவிட்சன், கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட மருத்துவ அணி அமைப்பாளர் மருத்துவர் சுரேஷ், மருத்துவர் புர்லிங்டன், மருத்துவ அணி நிர்வாகிகள், மாநகராட்சி தூய்மை பணியாளர்கள் உட்பட நாகர்கோவில் மாநகராட்சியில் பணிபுரியும் பெண் அலுவலர்கள், ஊழியர்கள் மற்றும் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.



பரமக்குடி சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட பரமக்குடி ஒன்றியம் மேலாய்குடி ஊராட்சி கிழக்கு குடியிருப்பு ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளியில் நடைபெற்ற கலைஞரின் வருமுன் காப்போம் மருத்துவ முகாமை பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் செ.முருகேசன் துவக்கி வைத்தார் இந்நிகழ்வில் பரமக்குடி கிழக்கு ஒன்றிய செயலாளர் ஜெயக்குமார், மேலாய்குடி ஊராட்சி மன்ற தலைவர் காளிமுத்து, பார்த்திபனூர் வட்டார மருத்துவ அலுவலர் சுகந்தி போஸ் வெங்கட்டன், குறிச்சி மருத்துவ அலுவலர் பிரதீபா மற்றும் கழக நிர்வாகிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

### கடலூர் மாவட்டம் ஸ்ரீமுஷ்ணம் மற்றும் குமராட்சி பகுதிகளில்

# ரூ.4 கோடி மதிப்பீட்டிலான அரசு கட்டடங்கள்!

### அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் திறந்து வைத்தார்!

கடலூர், அக். 21-

வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம். ஆர்.கே.பன்னீர்செல்வம் மாவட்ட ஆட்சித் தலைவர் சிபி ஆதித்யா செந்தில் குமார், தலைமையில் காட்டுமன்னார்கோயில் சட்டமன்ற உறுப்பினர் ம.சிந்தனை செல்வன் முன்னிலையில் ஸ்ரீமுஷ்ணம் மற்றும் குமராட்சி வட்டாரங்களுக்குட்பட்ட பகுதி களில்ரூ.4 கோடி மதிப்பீட்டிலான அரசு கட்டடங்களை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு 19.10.2024, சனிக்கிழமை திறந்து வைத்தார்.

வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம். ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்கள் குமராட்சி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கூடுவெளிச்சாவடி, வெள்ளூர் மற்றும் அத்திப்பட்டு ஊராட்சிகளில் கட்டப்பட்டள்ள ஊராட்சி செயலக கட்டடங்களை திறந்து வைத்ததோடு, வல்லம்படுகை ஊராட்சியில் வேளக்குடி பழையகொள்ளிடகரையில் 10 இலட்சம் பனை விதை நடும் பணியினையும் துவக்கி வைத்தார்.

ஸ்ரீமுஷ்ணம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட புடையூர் மற்றும் முடிகண்டநல்லூர் ஊராட்சிகளில் ஊராட்சி செயலக கட்டடங்கள், சோழத்தரம் ஊராட்சியில் ஊராட்சி மன்ற கட்டடம், இராமாபுரம் ஊராட்சியில் அங்கன்வாடி மையக் கட்டடம், மேலும் அவ்வூராட்சியில் நேரடி நெல் கொள்முதல் நிலையம், மேலப்பாலையூர் ஊராட்சியில் சுய உதவிகுழுக்களுக்கான பணிக்கூடம், நங்குடி, காவாலக்குடி, முடிகண்டநல்லூர், எசனூர், மலைமேடு ஆகிய ஊராட்சிகளில் கட்டப்பட்டுள்ள நியாய விலைக்கடைகள், தென்பாதி மற்றும் மலைமேடு ஊராட்சி களில் கூடுதல் இரண்டு வகுப்பறை கட்டடங்கள் உள்ளிட்ட கட்டடங்களை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்.

வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது,

தமிழ்நாடுமுதலமைச்சர் அவர்கள் பொதுமக்களின் நலன் கருதி அவர்கள் வாழ்வில் முன்னேற்றமடையும் வகையில் பல்வேறு சீரிய திட்டங்களை அறிவித்து செம்மையாக செயல்படுத்தி வருகிறார்கள்.

கிராமப்புற மக்களின் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் வகையிலும், தங்கள் ஊராட்சிகளிலே அரசு சான்றுகள், வீட்டுவரி, சொத்துவரி, குடிநீர்வரி கட்டிடும் வகையில் குமராட்சி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கூடு வெளிச்சாவடி, வெள்ளூர் மற்றும் அத்திப்பட்டு ஊராட்சிகளில் தலா ரூ.42.65 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டள்ள ஊராட்சி செயலக கட்டடங்கள் மற்றும் ஸ்ரீமுஷ்ணம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட புடையூர் மற்றும் முடிகண்டநல்லூர் ஊராட்சிகளில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் தலா ரூ.42.65 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஊராட்சி செயலக கட்டடம், சோழத்தரம் ஊராட்சியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் ரூ.23.57 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஊராட்சி மன்ற அலுவலக கட்டடங்கள் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்பட்டது.

பொதுமக்களின்அடிப்படைஉணவு தேவைகளை பூர்த்தி செய்திடும் வகையில் நங்குடி மற்றும் காவாலக்குடி ஊராட்சிகளில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் தலா ரூ.13.16 இலட்சம் மதிப்பீட்டிலும், முடிகண்டநல்லூர் ஊராட்சியில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் ரூ.9.12 இலட்சம் மதிப்பீட்டிலும், எசனூர் ஊராட்சியில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் ரூ.8.10 இலட்சம் மதிப்பீட்டிலும், மலைமேடு ஊராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.12.42 இலட்சம் மதிப்பீட்டிலும் கட்டப்பட்டுள்ள நியாய விலைக் கடைகளை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்பட்டது. அவ்வகையில் சமூக பாதுகாப்பு திட்டம் சிறந்த முறையில் தமிழ்நாடு முழுவதும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மேலும், பச்சிளம் குழந்தைகளுக்கு ஆரோக்கியமான சூழலில் கல்வி வழங்க வேண்டுமென்ற அடிப்படையில் இராமாபுரம் ஊராட்சியில் ரூ.11.78 இலட்சம் மதிப்பீட்டில் அங்கன்வாடி மையக் கட்டடம் மற்றும் பொதுமக்கள் இடைத்தரகர்கள் இல்லாமல்அரசுக்கு நேரடியாக தங்கள் பயிர்களை வழங்கும் வகையிலும், மழை, வெள்ளம் உள்ளிட்ட பாதுகாப்பாக இயற்கை சூழ்நிலைகளால் தானியங்கள் கெட்டுப் போகாமல் பாதுகாத்திடும் வகையில் எசனூர் ஊராட்சியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் ரூ.28.94 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள நேரடி நெல் கொள்முதல் நிலையமும் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

பள்ளி மாணவ/மாணவிகள் பாதுகாப்பான சூழ்நிலையில் கல்வி பயில்வதற்கு ஏதுவாக தென்பாதி ஊராட்சியில் கனிமவள நிதியின் கீழ் ரூ.38 இலட்சம் மதிப்பீட்டில் அரசு மேல்நிலைப் பள்ளியில் கூடுதல் இரண்டு வகுப்பறை கட்டடத்தையும், மலைமேடு ஊராட்சியில் நமக்குநாமே திட்டத்தின் கீழ் ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் அரசு மேல்நிலைப் பள்ளியில் கூடுதல் இரண்டு வகுப்பறை கட்டடங்களும் இன்றையதினம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.மேலும், இயற்கை வளத்தினையும் பாதுகாக்கவும், மண் அரிப்பினை தடுக்கும்விதமாக வல்லம்படுகை ஊராட்சியில் வேளக்குடி பழையகொள்ளிட கரையில் 10 இலட்சம் பனை விதைகள் நடுதல் பணி இன்று துவக்கி வைக்கப்பட்டுள்ளது. மேலும் ஒவ்வொரு ஊராட்சியிலும் இப்பனை விதைகள் நடுதல் பணி விரிவு படுத்தப்படும்.

மேலும்,மகளிர் விடியல் பேருந்து பயணத் திட்டம், எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் குடும்ப தலைவிகளுக்கு மாதம் ரூ.1000/ உரிமைத் தொகை வழங்கும் கலைஞர் மகளிர் உரிமை திட்டம், உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கு 50 சதவீதம் இட ஒதுக்கீடு, இல்லம் தேடி கல்விதிட்டம்,1 முதல் 5ஆம் வகுப்பு வரை அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு முதலமைச்சரின் காலை உணவு திட்டம், உயர்கல்விக்கு வழிகாட்டும் வகையில் நான் முதல்வன் திட்டம், புதுமைப்பெண் திட்டம், தமிழ் புதல்வன் திட்டம் போன்ற பல்வேறு திட்டங்கள் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

முன்னதாக, வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் அவர்கள் காட்டுமன்னார்கோயில் வட்டத்திற்குட்பட்ட லால்பேட்டை பகுதியில் வீராணம் ஏரியின் நீர் இருப்பு குறித்து பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்நிகழ்ச்சியில் கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) / திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை இரா.சரண்யா, ஆத்மா குழு தலைவர் தங்க ஆனந்தன், பேரூராட்சி தலைவர் செல்வி தங்க ஆனந்தன், ஒன்றிய கழகச் செயலாளர்கள் கே. ஆர். கே கோவிந்தராஜன், கே. ஆர்.ராயர், எஸ்.செந்தில்குமார் பேரூர் செயலாளர் பூ.செல்வகுமார் மாவட்ட வர்த்தக அணி தலைவர் முத்துராமலிங்கம், மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை தலைவர் வாசு.இராஜேந்திரன், மாவட்ட இலக்கிய அணி துணை அமைப்பாளர் ஆடிட்டர்.கருணாநிதி, ஆசிரியர் அணி மாவட்ட அமைப்பாளர் ஆசிரியர் ரவிச்சந்திரன், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் பூ .சதீஷ்குமார் மற்றும் தங்க வீரவேல் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.




தென்காசி வடக்கு மாவட்ட தி.மு.க. மருத்துவரணி சார்பில் வாசுதேவநல்லூர் காமராஜர் திருமண மண்டபத்தில் மாபெரும் இலவச மருத்துவ முகாம் தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ.தலைமையில் நடைபெற்றது.உடன் ராணி ஸ்ரீகுமார் எம்.பி. தலைமை செயற்குழு உறுப்பினர் யு.எஸ்.டி.சீனிவாசன், மாநில மருத்துவரணி துணை செயலாளர் செண்பக விநாயகம், சதன் திருமலைகுமார் எம்.எல்.ஏ. உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.இந்த மருத்துவ முகாம் மூலம் 600க்கு மேற்பட்ட நோயாளிகள் சிகிச்சை பெற்றனர்.மருத்துவர் ராணி ஸ்ரீ குமார் எம்.பி.பங்கேற்று நோயாளி களுக்கு சிகிச்சை அளித்தார்.